இதோ கௌம்பிட்டேன், எங்க வீட்லருந்து நான் போற இடம் ஒரு கிமீதான் இருக்கும். நாலு நாளைக்கு முன்னாடி நான் ஒரு முடிவு எடுத்திருந்தேன் அந்த முடிவின் படி நான் நடந்து போறதுதான் சரிங்றதால நடக்க ஆரம்பிச்சிட்டேன். நான் எடுத்த முடிவ நீங்க கேட்டிங்கனா இது தபான முடிவுனுதான் சொல்லுவிங்க. ஆனா எனக்கு அதபத்திலாம் கவலை இல்ல. ஏன் என் சத்யாவே இத கேட்டான்னா கண்டிப்பா எனக்கு அடிதான் விழும். ஆனா அதுலாம் இனிமே கனவுல கூட நடக்காது. நான் போய் சேருறது குள்ள உங்க கிட்ட என் கதைய கொஞ்சமா சொல்லிடுறன், அப்புறம் நீங்களே சொல்லுங்க நான் எடுத்த முடிவு சரியா தப்பானு. இப்ப நான் பூட்டிட்டு போற வீடு இருக்கே, இது என் சத்யா எனக்காக பாத்து பாத்து  கட்டின வீடு அவனுக்கு நான்னா உயிரு, எனக்கும் அவன்தான் உலகம். சித்திரை செல்வன்ங்கற என் பேர சித்ரா சித்ரானு அவன் சுருக்கி கூப்டற அழகுக்கே காலம்பூறா அவன் காலடியில கெடக்குலாம்.

சத்யா எஞ்சினியரிங் படிச்சவன், ஆனா நானோ பன்னெண்டாவது தான் அதுக்கு மேல எனக்கு படிக்க வசதி இல்ல. கும்பகோனத்துல ஒரு லாட்ஜ்ல ரூம்பாய் வேலை பாத்து கிட்டு இருந்தன் தெனமும் வேலை முடிஞ்சி பஸ் ஏற கும்பகோணம் பஸ்டாண்ட்ல ஒரு மணிநேரமாவது நிப்பேன். அந்த நாட்கள்ளத்தான் ஒரு நாள்தான் என் சத்யாவ மொத மொதல்ல பாத்தன். ரெண்டு பேரும் நேருக்கு நேர் பாத்துகிட்டப்பையே எங்களுக்கு புரிஞ்சிடுச்சு. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா பேசி பழக ஆரம்பிச்சோம் இந்த “பழக”ங்கிர வார்த்தயிலேயே நீங்க புரிஞ்சிக்கலாம் எங்களுக்குள்ள என்ன நடுந்துருக்கும்னு. அதெல்லாம் விவரமா சொல்ற நெலமையில நான் இப்ப இல்ல. பார்த்ததும் வேலைய முடிச்சுட்டு கௌம்புற பஸ்டாண்ட் உறவா இருக்கும்னு நெனச்ச எங்களுக்கே தெரியில அதுக்கு மேல எங்களுக்குள்ள ஒன்னு இருக்குனு. அவன் இப்பதான் படிப்ப முடிச்சுட்டு நல்ல வேலைல சேந்துருக்கானாம்’ ஒரு மாசம் லீவ்ல வந்துருக்கான்னு சொன்னான். எங்க ரெண்டு பேர் ஊருமே கொஞ்சம்  கிட்டங்குறதால அந்த ஒரு மாசமும் தெனமும் பாத்தோம் பழகுனோம் லீவ் முடிஞ்சு அவன் போறப்பத்தான் எனக்கு தெரிஞ்சிது இனிமேல் அவன் இல்லாம என்னால இருக்க முடியாதுன்னு அவனுக்கும் இதே நெலமைதான்’. அப்பத்தான் அவன் சொன்னான்.

“டேய் கவலை படாதடா சித்ரா சென்னை போனதும் உனக்கு ஒரு நல்ல வேலை பார்த்துட்டு உன்னையும் கூப்டுகிறேன். நாம ரெண்டு பேரும் அதுக்கபரம் ஒன்னாவே இருக்கலாம்”

சொன்னது மாறியே ஒரு எக்ஸ்போர்ட் கம்பனியில ஒரு வேலைய தயார் பண்ணிக்கிட்டு என்னயும் கூப்ட்டான். எந்தவித கட்டுபாடும் இல்லாம கவலை இல்லாம ஆனந்த வானில் சிறகடித்து கொண்டே இரண்டாண்டை கழித்தோம். எனக்கு உறவுன்னு சொல்லிக்க ஊர்ல இருந்த அம்மாவும் கொஞ்ச நாள்ல இறந்துட்டாங்க. அந்த காலகட்டத்துலதான் சத்யாவுக்கு அவங்க வீட்ல கல்யாண பேச்சை எடுத்தாங்க. மொதல்ல வேணாம்னு  சொல்லிக்கிட்டு

இருந்தவன் பட்டுன்னு என்கிட்டே கூட சொல்லாம ஒரு நாள் ஊருக்கு போய் அவங்க வீட்ல நான் சித்திரை செல்வன்னு ஒரு  பையன லவ் பண்ணுறன் அவனோடதான் கடைசிவரை இருசக்க போறன்னு சொல்லிட்டான். அரவாணியா பிறந்தவங்கள கூட நம்ம சமூகம் ஏத்துக்க பழகிகிட்டு இருக்கு ஆனா ஓரினகாதலை மட்டும் தெருவில் புனருற நாய போலஎள்ள பாக்கும்.?! இதுக்கு சத்யா வீடு மட்டும் என்ன விதி விலக்கா?. முடிஞ்ச அளவு போராடிட்டு கடைசி கட்டமா இனிமே கும்பகோணம் பக்கம் வரமாட்டனு சொல்லிட்டு வந்துட்டான். அன்னையிலருந்து பத்து வருசமா நாங்க வாழ்க்கையில எத்தனையோ உயரத்த தொட்டுடோம். அப்பப்ப அவங்க அம்மாகிட்டயும் அவனோட அண்ணன் பையன் ஒருத்தன்ட்ட மட்டும் போன்ல பேசுவான், பணமெல்லாம் அனுப்புவான் அதோட அவனோட குடும்ப உறவுகள் நிறுத்திக்கும். எங்களுக்கு இருந்த காதல் அளவுக்கு இந்த உலகத்துல யாருக்கும் இருக்க வாய்ப்பு இல்ல. அவனுக்கு போன வரத்துலதான் முப்பத்தி அஞ்சு வயசு முடிஞ்சது எனக்கு முப்பத்தி மூணு முடிய போகுது. ஆனா இத்தன வருஷத்துல போன வாரத்த தவிர நாங்க சண்டைனு போட்டு கிட்டது இல்ல. ஒருத்தர ஒருத்தர் சந்தேக பட்டது இல்ல.

அவனுக்கு என் அளவுக்கு உடல் சார்ந்த உழைப்பு இல்லனாலும் கொஞ்சம் மூளைக்கு வேலை குடுக்குற வேலைதான். அவன் கம்ப்யூடர் எஞ்சினியர்தான் இருந்தாலும் எல்லா விஷயத்தையும் பத்தி தெரிஞ்சி வெச்சுருப்பான். அப்பப்ப அவன் வேலைய பத்தி எனக்கு சொல்லுவான் ஆனா எனக்கு தான் ஒன்னும் புரியாது. மூணு மாசத்துக்கு முன்னாடி இப்படிதான் ஒரு விஷயம் சொன்னான் எதோ ப்ராஜெக்ட் ஹான்டோவர் பண்றப்ப ப்ரோக்ராம்லாம் கரப்ட் ஆய்ட்டுன்னு இராப்பகலா கண் முழிச்சு என்கூட பேசகூட நேரம் இல்லாதவனாய் வேலை செஞ்சி அந்த வேலைய குறிப்பிட்ட தேதி குள்ள முடிச்சு குடுத்துட்டு அன்னைக்கு மதியம் வீட்டுகு வந்தான். வந்தவன் நேரா வந்து என் மடில விழுந்தான் சரி களைப்பா இருக்கான் போலன்னு தலைய தடவி குடுத்தேன், அப்பத்தான் தெரிஞ்சிது தலையெல்லாம் சொத சொதனு ஒரே வேர்வ. என்னடானு நிமித்தி பார்த்தா என் சத்யா கண்ண முழிக்கவே இல்ல!? உடனே கார்ல தூக்கி போட்டுகிட்டு டாக்டர பாக்க ஓடுனன். அவன் கண்ணு முழிச்சு பாக்குறதுக்குள்ள நான் பட்ட பாடு இருக்கே நீங்களா இருந்தா அங்கேயே உயிர விட்டுருப்பிங்க. அப்புறம் கடைசியா நாலஞ்சி நாளா ஒழுங்க தூங்காம இருந்ததால பீபி ஹெவியாயிட்டு அதான் மயக்கம் போட்டுட்டாரு இப்ப ஒன்னும் இல்ல மத்திரைலாம் முழுங்க வேணாம் ஒரு வாரத்துக்கு பீபி செக் பண்ணிக்குங்க பாத்துகிட்டு மேல என்ன பன்னலாம்னு முடிவேடுபோம், ஒவரா அவர டென்ஷன் ஆகாம பாத்துக்குங்கனு சொல்லி அனுப்பிட்டாங்க. அடுத்த ஒரு வாரத்துல பீபி நார்மலாதான் இருந்துது..

போன வாரம்தான் எங்க வாழ்க்கையில விதி விளையாட ஆரம்பிச்சுது' அவங்க ஆபிஸ்ல புதுசா ஒரு பையன் வேலைக்கு சேந்துருந்தான் “ராகவன்”னு. அவன சத்யாதான் ட்ரைன்

பன்னிகிட்டு இருந்தான். ஒரு நாள் வேலை சம்பந்தமா எங்கயோ வெளில போன சத்யா அந்த பையனையும் வீட்டுக்கு கூட்டி வந்தான்.

" சித்ரா அவன் இன்னைக்கு நம்ம வீட்டுலதான் தூங்க போறான்டா செகன்ட் பெட்ரூம அறேஞ் பண்ணி கொடு" னு சொல்லிட்டு குளிக்க போய்ட்டான் நான் ராகவன்ட்ட கொஞ்சம் பேசிட்டு ரூம் ரெடி பண்ணி குடுத்துட்டு படுக்க போய் சத்யா வருவான் வருவான்னு வைட் பண்ணிட்டேருந்தன் மணி பத்தாச்சே தவிர அவன் வரல. சரின்னு போய் பார்த்தா அந்த பையனோட லேப்டோப்ல என்னமோ பணிக்கிட்டு இருந்தான். சரி வருவான்னு நெனச்சுகிட்டு வந்து நான் படுத்தன், அப்டியே தூங்கிட்டேன். காலையில எனக்கு முன்னாடியே எழுந்து  ரெண்டு பேரும் வேலைக்கு போய்ட்டானுங்க. நீங்களே சொல்லுங்க? இந்த நெலமையில கோவம் வருமா வரதா.? சாயந்தரம் வந்தவண்ட்ட நான் ஒழுங்கா பேசுல, சிரிக்கல, சேந்து உக்காந்து சாப்டல, அவனும் சாப்புடுல, நானும் சாப்பிடல படுத்துட்டோம்., காலையில எழுந்து என்ன எழுப்பினான்.,

"டேய் சித்ரா எந்திருடா....."

"என்ன எதுக்கு எழுப்புற போய் அந்த ராகவன் எழுப்பு"

"அதன் சாருக்கு கோவமா?

" யே சும்மா நடிக்காதடா நீங்க ரெண்டு பேரும் அன்னைக்கு அந்த ரூம்ல என்னென்ன பன்னிருபபிங்கன்னு எனக்கு தெரியாத?"

" என்ன சந்தேக படுறியாடா,.........?" கண்ணில் நீர் வழிய கேட்டான்

" ஏன் பட்டா என்ன தப்பு?" அவ்வளவுதான் எழுந்து ஒன்றும் பேசாமல் கிளம்பி சென்று விட்டான். அன்னைக்கு எனக்கு லீவுங்கறதால நான் மட்டும் வீட்டுல இருந்தன். உனக்கு இந்த வயசுல இந்த சந்தேகம் தேவைதானா.....?. என்று என்னையே நொந்து கொண்டு அமர்ந்திருந்தேன். அப்பத்தான் என் வாழ்க்கையே புரட்டி போட போகிற அந்த போன் வந்தது.

" ஹலோ சித்திரை செல்வனா........?

"ஆமா நீங்க?

"நான் சத்யமூர்த்தி சார் கம்பனிலருந்து பேசுறன்., சார் திடிர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டாரு நீங்க உடனே ஸ்டான்லிக்கு வந்துடுங்க"

ஓடுனன். அங்க நான் போனதும் அவன் கம்பனிலருந்து வந்திருந்த ரெண்டு பெரும் போய்டானுங்க. கண்ண இருக்கமா மூடிகிட்டு முகத்துல,விரல்ல,நெஞ்சுலனு எங்க

பாத்தாலும் வயர் சூழ படுத்திருந்தான் சத்யா. போய் கத்துனன் கதறுணன் அவன் காதுலதான் விழல. அப்பறம்கொஞ்ச நேரத்துல டாக்டர் வந்தாரு

“சார் நீங்க பேஷண்டுக்கு ரிலேஷனா........? சொல்றனேன்னு தப்பா எடுத்துக்காதிங்க அவரு இப்ப டீப் கோமால இருக்காரு. ஏற்கனவே ஹெவி பீபி இருந்திருக்கும் போல இப்ப ஓவரா ஆகி மூளையில இருந்த ரத்த குழாய்லாம் வெடிச்சிருச்சு. மேலும் மூளை செல்லுலாம் சிதஞ்சிகிட்டு இருக்கு. மூளையில மூச்சையும் இதயத்துடிப்பையும் கட்டுபடுத்துற பகுதி மட்டும் செயல் படுது. எங்க மொழியில இத “சிரிபெறல் ஹெமரேஜ்”னு சொல்லுவோம். கொஞ்சம் கஷ்டம்தான் சார் எதுக்கும் ரேலேஷனுக்குலாம் சொல்லிடுங்கனு சொல்லிட்டு போய்ட்டான். உலகத்துல யாருக்கும் வரக்கூடாத நெலமைதான் இது எனக்கு வந்துட்டு. இதுக்கு காரணம் நாந்தான் என் சத்யா என்ன விட்டு போக போறான். நான் காலைல அவன சந்தேக பட்டுடன் அதுக்குதான் இப்ப என்ன ஓரேடியா விட்டுட்டு போபோறான். என்ன புலம்பி என்ன ஆகபோகுது அழுது அழுது தீத்துட்டு அவங்க வீட்டுக்கு தகவல் குடுத்தன் அவனோட அம்மா வந்து பாத்துட்டு கொஞ்ச நேரம் அழுதுட்டு போய்ட்டாங்க. அவங்க கூட வந்திருந்த சத்யாவோட அண்ணன் பையன் மட்டும் இருந்தான். அன்னைக்கு சாயந்தரம் நான் சத்யாவோட பக்கத்துல அழுது கிட்டே அவன் கைய புடிச்சுகிட்டு உக்காந்துருந்தன் திடிர்னு கையில ஒரு அசைவு தெரிஞ்சிது உடனே நிமிந்து பாத்தன் சத்யா என்ன உத்து பாத்துகிட்டே இருந்தான், கண்ணுலருந்து தண்ணி வழிஞ்சிது நானும் அழுதுகிட்டே அவன்கிட்ட பேச ஆரம்பிச்சப்பதான் ஆயிரம் கேள்விகளையும் ஏக்கங்களையும் எனக்காக விட்டுட்டு அந்த கண்கள் நிலை குத்தி நின்றிருந்தது.

என் சத்யா என்ன விட்டு போய்ட்டான். தன் வாழ்நாளில் எனக்காக எதைஎதையோ பொறுத்துகிட்டவன் என்னோட ஒரு சொல் பொறுக்காம விட்டுட்டு போய்ட்டான். நான் வீட்டுலருந்து கெளம்புனப்ப சொன்னன்ல அந்த முடிவ அப்பவே நான் எடுத்துட்டன்.

சத்யா எனக்காக வாங்குன அந்த கார்லயே அவனோட அண்ணன் பையன் என்னையும் சத்யாவையும் கூட்டிகிட்டு கும்பகோணம் போய்ட்டான். நான் பெண்ணா பொறந்து அவன கல்யாணம் பண்ணியிருந்தாலாவது அவன் பக்கத்துலையே என்ன உக்கார வெச்சுருப்பாங்க. நான் தனிய வெளில உக்காந்துருந்தன். என் உயிர் உயிரில்லாமல் உள்ள படுத்திருந்துது. உலகமே ஒன்னாவும் நான் மட்டும் தனியாகவும் இருக்குற மாதிரி இருந்துது. நேத்தி வரைக்கும் எனக்கு சொந்தமா இருந்த என் சத்யாவ நெருப்புக்கு சொந்தமாக்கிட்டு சென்னை வந்தேன். பத்து வருசமா அவனோட இருந்த எங்க வீடுதான் எங்க காதலுக்கான தாஜ்மஹால். அத நான் வீணடிக்க விரும்பல சத்யாவோட அண்ணன் பையனுக்கு எழுதி வெச்சுட்டு என் பேருல சத்யா வங்கி வெச்சுருந்த சொத்தெல்லாம் அவனோட அண்ணன் பையன் பேருக்கும் அவன் அம்மா பேருக்கும் மாத்திட்டன். இதுக்கே ரெண்டு மூணு நாளாயிட்டு. அதுக்குள்ள சத்யா போட்டிருந்த இன்சூரன்ஸ் பணமெல்லாம் வந்துட்டு அதுக்குலாம் நாந்தான் வாரிசாம்.!! பைத்தியக்காரன், அவன் செத்ததுக்கப்றம் நான்

இந்த உலகத்துல எப்டி இருப்பனு நெனச்சி இந்த பணமெல்லாம் போட்டுருந்தானு தெரியல?. இந்த உலகத்தையே என் பேர்ல எழுதி வச்சுருந்தலும் என் சத்யா இல்லாம நான் என்ன பண்ண முடியும் சொல்லுங்க? அதான் நேத்தி கும்ப கோணம் போய் எல்லா பத்திரத்தையும் அவங்கள்ட குடுத்துட்டு நான் வெளியூர் போறதா சொல்லிட்டு வந்துட்டன். என்ன ஊர்னு கேக்குறிங்களா என் சத்ய போயிருக்குற ஊருக்குத்தான். எங்க கதைய சொல்லிகிட்டே நானும் வந்து சேந்துட்டேன். கண்ணு வேற மங்க ஆரமிச்சுட்டு பாக்கெட்டுல நான் எழுதி வெச்சுருக்குற லெட்டரும் இருக்கு, போய் சேர வேண்டிய நேரமும் வந்துட்டு. என்ன லெட்டர்னு கேக்குறிங்களா'? என் சதய்வுக்கு சொந்தமான என்னோட உடம்பு அனாதைய கெடக்க கூடாதுல. அதான் என் சாவுக்கு யாரும் காரணம் இல்ல நான் மன விரகத்திலதான் வெஷம் குடிச்சன், எனக்குன்னு யாரும் இல்ல தயவு செஞ்சி என் உடம்ப நல்ல விதமா அடக்கம் பன்னிடுங்க அதுக்கான செலவு பத்தாயிரம் என் பாக்கெட்டுல இருக்குனு போலிசுக்கு லெட்டர் எழுதிருக்கன். அதோ தெரியிதே அந்த ஸ்டேஷன் வாசல்ல விழுந்து உயிரை விட வேண்டியதுதான் பாக்கி. என் சத்யா இல்லாத உலகத்துல எனக்கு மட்டும் என்ன வேலை?. அதான் எங்க ஊர் பக்கம் எலிக்கு வைக்கிற குருணைய வாங்கி எண்ணையில கலந்து குடிச்சுட்டேன். இந்த முட்டாள் போலிஸ் காரவங்க நம்ம வேதனைய புரிஞ்சிக்காம காப்பாத்துனாலும் காப்பதிடுவாங்க. அதான் நடந்தே வந்தன் இந்நேரம் வெஷம் உடம்பு முழுதும் பரவிருக்கும். உயிருக்கு உயிரா இருந்தவங்க உயிரோட இல்லாதப்ப நாம மட்டும் இருக்குற வேதனைய விட வேற வேதன உலகத்துல இருக்க முடியுமா?. இப்ப சொல்லுங்க நான் எடுத்த முடிவு சரியா தப்பா...........?

-நிறைந்தது